# யூன்– 02 – சனி

**தூயவர்கள் மர்செலீனுடஸ், பீட்டர்**

## “உமது பேரன்பு உயிரினும் மேலானது” (தி.பா 63:3)

**முதல் வாசகம் : யூதா 1 : 17, 20 – 25**

அன்பார்ந்தவர்களே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருத்தூதர்கள் முன்னுரைத்த வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள். அன்பானவர்களே, தூய்மைமிகு விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டு உங்கள் வாழ்வைக் கட்டி எழுப்புங்கள் தூய ஆவியின் துணையுடன் வேண்டுதல் செய்யுங்கள். கடவுளது அன்பில் நிலைத்திருங்கள். என்றுமுள்ள நிலைவாழ்வைப் பெற நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இரக்கத்தை எதிர்பார்த்திருங்கள். நம்பத் தயங்குவோருக்கு இரக்கம் காட்டுங்கள்.வேறுசிலரை அழிவுத் தீயிலிருந்து பிடித்திழுத்துக் காப்பாற்றுங்கள். மற்றும் சிலருக்கு இரக்கம் காட்டும்போது எச்சரிக்கையாய் இருங்கள் ஊனியல்பால் கறைப்பட்ட அவர்களது ஆடையையும் வெறுத்துத் தள்ளுங்கள்.வழுவாதபடி உங்களைக் காக்கவும் தமது மாட்சித் திருமுன் மகிழ்ச்சியோடு உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்ல நம்மீட்பராகிய ஒரேகடவுளுக்கு, நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் வழியாய், மாட்சியும் மாண்பும் ஆற்றலும் ஆட்சியும் ஊழிக் காலந்தொட்டு இன்றும் என்றென்றும் உரியன. ஆமென்!

**பதில்பாடல் :** ஆண்டவரே என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது

**நற்செய்தி : மாற்கு 11 : 27 - 33**

அக்காலத்தில் இயேசுவும் அவருடைய சீடர்களும் மீண்டும் எருசலேமுக்கு வந்தார்கள். இயேசு கோவிலில் நடந்து கொண்டிருந்தபோது தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள், மூப்பர்கள் ஆகியோர் அவரிடம் வந்து, ”எந்த அதிகாரத்தால் நீர் இவற்றைச் செய்கிறீர்? இவற்றைச் செய்ய உமக்கு அதிகாரம் கொடுத்தவர் யார்?” என்று கேட்டனர். இயேசு அவர்களுக்கு மறுமொழியாக, ”நானும், உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன் நீங்கள் மறுமொழி கூறுங்கள். அப்போது எந்த அதிகாரத்தால் இவற்றைச் செய்கிறேன் என நான் உங்களுக்குச் சொல்வேன். திருமுழுக்கு அளிக்கும் அதிகாரம் யோவானுக்கு விண்ணகத்திலிருந்து வந்ததா? அல்லது மனிதரிடமிருந்து வந்ததா? எனக்குப் பதில் சொல்லுங்கள்” என்றார். அவர்கள், “விண்ணகத்திலிருந்து வந்தது” என்போமானால், ”பின் ஏன் அவரை நம்பவில்லை” எனக் கேட்பார். எனவே ”மனிதரிடமிருந்து வந்தது” என்போமா?” என்று தங்களிடையே பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் மக்கள் அனைவரும் யோவானை ஓர் இறைவாக்கினராகக் கருதியதால் அவர்கள் அவர்களுக்கு அஞ்சினார்கள். எனவே, அவர்கள் இயேசுவிடம், ”எங்களுக்குத் தெரியாது” என்று பதிலுரைத்தார்கள். இயேசுவும் அவர்களிடம், எந்த அதிகாரத்தால் இவற்றைச் செய்கிறேன் என்று நானும் உங்களுக்குச் கூறமாட்டேன்” என்றார்.

**தியானம்:** சிலர் கேள்வி கேட்பதில் வல்லவர்களாக இருப்பார்கள். எதிராளியை எவ்வாறு கேள்வி கேட்டு மடக்கலாம் என்றுதான் ஒரு சட்டத்தரணி பார்க்கின்றார். கொடுக்கும் பதில்தான் முடிவை நிர்ணயிக்கின்றது. தேர்தல் காலங்களில் விவாத மேடைகள் இடம்பெறும், அதனைப் பொறுத்துத்தான் மேற்குலக நாடுகளில் வெற்றி பெறும் அணி கணிப்பிடப்படுகின்றது. ஒருவர் ஒரு துறவியிடம் வந்தார், அவர் தமது கைகளிலே ஒரு வண்ணாத்திப் பூச்சியை பிடித்து வைத்திருந்தார். அவர் துறவியைப் பார்த்து “என் கைகளில் உள்ள வண்ணாத்திப் பூச்சி உயிருடன் இருக்கின்றதா, இல்லையா?” என்று கேட்டார். உயிருடன் உள்ளது என்று சொன்னால் அதனை கைகளால் நசுக்கி கொண்றுவிடலாம். இறந்து விட்டது என்று சொன்னால் அதனை பறக்கவிடலாம் என்று அவர் மனதிற்குள் நினைத்துக் கொண்டார். இதனை அறிந்துகொண்ட துறவி அவருக்கு பதிலாக “அது உன் கைகளில்தான் உள்ளது என்றார்” இன்றைய நற்செய்தியிலும் யாருடைய அதிகாரத்தைக் கொண்டு இதனைச் செய்கிறீர் என்ற கேள்வி யேசுவிடம் கேட்கப்படுகின்றது. அவர் கொடுத்த பதில் கேள்வி கேட்டவர்களை ஊமைகளாக்கியதை நாம் பார்க்கலாம். விதண்டாவாதமாக கேட்கப்படும் கேள்விகளுக்கு இதுதான் நடக்கும். அதிகாரம் துஸ்பிரயோகம் செய்யப்படும்போது, அடக்கி ஆளப்படும்போது, அடிமைப்படுத்தப்படும்போது கேள்விகள் கேட்கப்பட வேண்டும், நீதிக்காக, நேர்மைக்காக, அநியாயத்தை சுட்டிக்காட்ட கேள்விகள் தேவை. அநியாயத்தை சுட்டிக்காட்டியதால்தான் திருமுழுக்கு அருளப்பரின் தலை வெட்டப்பட்டது. யேசு எதிர்க்கப்பட்டார், கொல்லப்பட்டார். இன்றும் பல பத்திரிகைகளில் உண்மையைக் கூறுகின்றவர்களின் குரல்வளை நசுக்கப் படுகின்றது. பெண்பிள்ளைகளின் கல்விக்காக குரல்கொடுத்த பாக்கிஸ்த்தானை சேர்ந்த சிறுமி மலாலா சுடப்பட்டார். ஆனால் தேவையற்ற காரணங்களுக்காக, நம்மை உயர்வாகக் காட்டிக்கொள்வதற்காக் கேள்விகள் கேட்க வேண்டாமே!